<u>சுருக்கம்</u>

சிலை அமைத்தல்–தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகராட்சிக்குட்பட்ட உச்சிப்பிள்ளையார் கோவில் அருகில் சோமேஸ்வரன் சன்னதி முன்புறம் ஏற்கனவே உள்ள காந்தி சிலைக்குப் பின்னால் 50 அடி தள்ளி, புதிய வெண்கலத்தினாலான மகாத்மா காந்தியடிகளின் முழுவுருவச் சிலை அமைப்பது – அனுமதி அளித்து –ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை) எண்.116 நாள் 10.6. 2010

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 20.11.1998.

மேலும் படிக்க:

2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி தலைவர் கடிதம் ந.க.ண்.4963/2010/த1, நாள் 31.5.2010.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க. எண். 26630/2010/எம்.1, நாள் 2.6.2010.

-----

**<u>ஆணை:</u>**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், கும்பகோணம் நகராட்சி உச்சிப்பிள்ளையார் கோவில் அருகில், சோமேஸ்வரன் சன்னதி முன்புறம், நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள வார்டு எண்.5, பிளாக்–2, நகரளவு எண்.85/1–ல் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள அண்ணல் காந்தியடிகளின் முழு உருவ சிமெண்ட் சிலை சேதமடைந்து விட்டதால், ஏற்கனவே சிலை இருந்த இடத்திலிருந்து 50 அடி பின்னால் தள்ளி, புதிய வெண்கலத்தினால் செய்யப்பட்ட முழு உருவ சிலையினை நிறுவிட அண்ணல் காந்தியடிகள் சிலை அமைப்புக்குழுவின் தலைவர் திரு.எம். இராஜாங்கம் அவர்கள் அனுமதி கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2. மேற்குறிப்பிட்டுள்ள சிலை அமைந்துள்ள இடம் மற்றும் மாற்றி அமைக்க உள்ள இடம், வார்டு எண்.5, பிளாக்–2, நகரளவு எண்.85/1–ல் உள்ள சர்க்கார் புறம்போக்கு வகைப்பாடான நெடுஞ்சாலை பராமரிப்பில் உள்ள பகுதி எனவும், அரசாணை வழிகாட்டுதலின்படி சம்பந்தப்பட்ட துறை மற்றும் காவல்துறையினரின் தடையில்லாச் சான்று பெற்று அரசின் அனுமதியினை பெற நகராட்சிக்கு எவ்வித தடையும் இல்லை என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். இதற்கு கும்பகோணம் நகர்மன்றம் தீர்மான எண்.85, நாள் 31.05.2010–ன்படி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

3. தஞ்சாவூர் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளரின் அறிக்கையில், தற்பொழுது சிலை புதுப்பித்து மீண்டும் அமைக்கப்பட உள்ள இடம் விக்ரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் மாநில சாலையில் கி.மீ.125/2–ல் தார் புருவத்திலிருந்து 8.00 மீட்டருக்கு அப்பால் இருப்பதால், மேற்படி இடத்தில் சிலை அமைப்பதனால் பொதுமக்களுக்கோ மற்றும் போக்குவரத்திற்கோ எந்தவிதமான இடையூறும் ஏற்படாது எனத் தெரிவித்துள்ளார். சிலை அமைப்பு குழுவினரிடமிருந்து நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலை விரிவுபடுத்தும் போது மேற்படி இடம் தேவைப்படுமானால், தன் சொந்த செலவிலேயே சிலையினை அப்புறப்படுத்தி தரப்படும் என சம்மத கடிதத்தினை பெற்று, மேற்படி இடத்தில் மகாத்மா காந்தி சிலை அமைப்பதற்கு தடையின்மை சான்று வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

4. கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் கடிதத்தில், தற்போது சிலை அமையவுள்ள இடத்திற்கு மேற்கு புறமாக 50 அடி தூரத்தில் அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் முழுவுருவ வெண்கலச் சிலை அமைப்பதால், பொது மக்களுக்கோ, போக்குவரத்திற்கோ, பொது நன்மைக்கோ எவ்வித இடையூறுமில்லை எனவும், நகரளவு புல எண்.51/1–ல் தற்போது புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில், அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் முழுவுருவ வெண்கலச் சிலை அமைத்திட தடையேதுமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

5. தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இது குறித்த தனது அறிக்கையில், தற்போது சேதமடைந்த சிலை உள்ள இடத்திலிருந்து 50 அடி தூரம் தள்ளி போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறுமில்லாமல் தஞ்சாவூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் முழுவுருவ வெண்கலச்சிலை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட இடம் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடமாதலால், அரசாணையில் தெரிவித்துள்ளபடி விதிமுறைகளுக்குட்பட்டு சிலை அமைத்துக் கொள்வதில் எவ்வித ஆட்சேபனை இல்லையென தெரிவித்துள்ளார்.

6. எனவே, கும்பகோணம் நகராட்சி உச்சிப்பிள்ளையார் கோவில் அருகில் சோமேஸ்வரன் சன்னதி முன்புறம் நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள வார்டு எண்.5, பிளாக்–2, நகரளவு எண்.85/1–ல் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள அண்ணல் காந்தியடிகளின் முழு உருவ சிமெண்ட் சிலை சேதமடைந்து விட்டதால், புதிதாக அமைக்க உள்ள வெண்கலசிலையை, சிலை அமைப்புக் குழுவினரே தங்களது சொந்த செலவில் பராமரித்திட வேண்டும் எனவும், நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சாலை விரிவுபடுத்தும்போது இடம் தேவைப்படுமானால், தங்களது சொந்த செலவில் சிலையை அப்புறப்படுத்தி தர வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில், வெண்கலத்தினால் செய்யப்பட்ட புதிய மகாத்மா காந்தியடிகளின் முழு உருவ சிலையினை நிறுவிட அனுமதி வழங்கலாம் என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

7. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், கும்பகோணம் நகர்மன்ற தீர்மானம் எண்.85, நாள் 31.05.2010–ல், மேற்படி சிலை நிறுவுவது குறித்து தீர்மானம் இயற்றி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்கண்ட இடத்தில் மகாத்மா காந்தியடிகளின் வெண்கலத்திலான முழுவுருவ சிலையை, நிறுவிட அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

8. மேற்கண்ட சூழ்நிலையில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோரின் பரிந்துரையினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 20.11.1998–ல் விதித்துள்ள நிபந்தனைகளுடன் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் விதித்துள்ள நிபந்தனைகளையும் சேர்த்து விதித்து, கும்பகோணம் நகராட்சி உச்சிப்பிள்ளையார் கோவில் அருகில், சோமேஸ்வரன் சன்னதி முன்புறம் நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள சர்க்கிள் புறம்போக்கு என வகைப்பாடான வார்டு எண்.5, பிளாக்–2, நகரளவு எண்.85/1–ல், ஏற்கனவே அண்ணல் காந்தியடிகள் சிலை இருந்த இடத்திலிருந்து 50 அடி பின்னால் தள்ளி, நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலை விரிவுபடுத்தும் போது மேற்படி இடம் தேவைப்படுமானால், தன் சொந்த செலவிலேயே சிலையினை அப்புறப்படுத்தி தரப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில்,புதிய மகாத்மா காந்தியடிகளின் முழுவுருவ வெண்கல சிலையை நிறுவ, அண்ணல் காந்தியடிகளின் சிலை அமைப்புக்குழுவிற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

9. இவ்வாணை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அ.சா.எண். 9067/ HP2/ 2010, நாள் 10.6.2010–ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்.
நகராட்சி ஆணையர், கும்பகோணம் நகராட்சி, கும்பகோணம்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை– 600 009.
செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை , சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலளரின் தனிச் செயலர்,
சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.